## கோவையில் புதிதாக

# மருத்துவ ஆராய்ச்சி பயிற்சி மையம்: 14ம்தேதி துவக்கம்

கோவை, ஜூலை 30

கோவையில் புதிதாக கே.டி.வி. ஆர். குருப் சார்பில் மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சி பயிற்சி மையம் தொடங்கப்படுகிறது.

கே.டி.வி.ஆர். குருப் மருத்துவமனை நிர்வாக இயக்குநரும், தலைமை லேப்ராஸ்கோபி சிகிச்சை நிபுணருமான டாக்டர் வி. ஜனார்த்தனம் கூறியதாவது-

கே.டி.வி.ஆர். விஜய் தீபா குருப் கிளினிமைன்ட்ஸ், மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி வகுப்பு மையத்தை ஆகஸ்ட் 14ம்தேதி தொடங்குகிறது. வகுப்பறை மற்றும் ஆன்லைன் பயிற்சிகள் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்தியாவின் பெரிய மற்றும் மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சியில் முன்னோடியாக திகழும் புகழ்வாய்ந்த கிளினிமைன்ட்ஸ் அமைப்பின் சேவையை அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகிறோம். விரைவில் சென்னையிலும் ஒரு மையத்தை துவக்க உள்ளோம்.



கேடிவிஆர் குருப் மருத்துவ மனை இயக்குநர் டாக்டர் விஜய்வெங்கடராமன்.

இவ்வாறு கூறினார்.

தமிழ்நாடு, புதுச்சேரி மாநில கிளிமைண்ட்ஸ் தலைவரும், கேடிவிஆர் குருப் மருத்துவமனையின் இயக்குநருமான டாக்டர் ஜே. விஜய் வெங்கடராமன் கூறியதாவது-

இந்திய மருத்துவர்கள் மற்றும் மருத்துவதுறை சார்ந்த வல்லுநர்களின் பங்களிப்பு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக திகழ்கிறது. குறிப்பாக பார்மாசூட்டிகல்ஸ் மற்றும் மற்றும் பயோ டெக்னாலஜி துறை வளர்ச்சி பெற்று வருகிறது.

இருப்பினும் நம்நாட்டில் இத்துறையின் வழிகாட்டிகள் மற்றும் அறிவியலை பாடமாக படித்து அதன் வளத்தை முழுமையாக பயன்படுத்தாதவர்களும் சரியான வழியில் பயிற்சி பெற்று அவர்கள் துறை சார்ந்த பணியில் வெற்றி பெற கேடிவிஆர் விஜய் தீபா குருப், கிளினிமைன்ட்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்மூலம் நீண்ட நாள் கனவு நனவாகிறது. இது நம் நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உத்வும்.

2014ம் ஆண்டில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் இத்துறையின் வளர்ச்சிக்கு தேவைப்படுவர். வேலைவாய்ப்புக்கு கிளினிமைன்ட்ஸ் உதவி புரியும் என்றார்.

PIRPAGAL : 30-07-2010